தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 29 | 4 Pages | 29.8.2024 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 29 | 4 பக்கங்கள் | 29.8.2024 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின்**
**மெலியார்மேற் செல்லு மிடத்து**

**விளக்கம்:**

(அருள் இல்லாதவன் ) தன்னை விட மெலிந்தவர் மேல் துன்புறுத்த செல்லும் போது, தன்னை விட வலியவரின் முன் தான் அஞ்சி நிற்கும் நிலைமையை நினைக்க வேண்டும்.

# முதலீடுகளை ஈர்க்கவே அமெரிக்கா செல்கிறேன்: முதல்வர் மு.க.ஸ்டாலின்

சென்னை, ஆக. 29

தமிழ்நாட்டிற்கு தொழில் முதலீடுகளை ஈர்க்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று இரவு அமெரிக்கா புறப்பட்டுச் சென்றார்.

சென்னை விமான நிலையத்தில் முதலமைச்சர் முகஸ்டாலின் இன்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

தமிழ்நாட்டை நோக்கி முதலீடுகளை ஈர்க்க உங்கள் வாழ்த்துகளுடன் அமெரிக்கப் பயணத்தை மேற்கொள்கிறேன்.

முதலீடுகளை ஈர்க்க இதுபோன்ற பயணங்களை மேற்கொண்டு வருகிறேன். ரூ.3,450 கோடி மதிப்பிலான புதிய திட்டங்கள் முன்னேற்ற நிலையில் உள்ளன.

கடந்த 3 ஆண்டுகளில் 872 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டு உள்ளது. இதனால் 18 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.



புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் அனைத்தும் துரித கதியில் செயல்பட்டு வருகின்றன.

ரூ.9,99, 093 கோடி மதிப்பிலான திட்டங்கள் மூலம் 18 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு.

கடந்த 21ம் தேதி நடைபெற்ற மூதலீட்டாளர்கள் மாநாட்டில் 2 நிறுவன திட்டங்களை தொடங்கி வைத்தேன் என தெரிவித்துள்ளார்.

# மலேசியாவின் முன்னாள் பிரதமர் மீது தேச துரோக வழக்கு பதிவு



கோலாலம்பூர், ஆக. 29

கடந்த 1957ம் ஆண்டு பிரிட்டனிடம் இருந்து விடுதலை பெற்ற பிறகு மலேசியாவில் மன்னராட்சி தொடங்கியது. அங்குள்ள 9 மலாய் மாகாண சுல்தான்கள் அல்லது ஆட்சியாளர்கள் சுழற்சி முறையில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை மலேசியாவின் மன்னராக பதவியேற்று வருகின்றனர்.

இந்த நிலையில், மலேசியாவின் முன்னாள் மன்னர் சுல்தான் அப்துல்லா குறித்து அவதூறான வகையில் பேசியதாக அந்நாட்டின் முன்னாள் பிரதமர் முஹ்யித்தீன் மீது குற்றம்சாட்டப்பட்டது. இது தொடர்பான வழக்கில் முஹ்யித்தீன் மீது தேச துரோக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு விசாரணை மலேசியாவின் கெலாண்டன் மாகாண கோர்ட்டில் நடைபெற்று வருகிறது.

முன்னதாக கடந்த 14ந்தேதி, கெலாண்டனில் நடைபெற்ற இடைத்தேர்தல் பிரசாரத்தின்போது பேசிய முஹ்யித்தீன், 10வது பிரதமராவதற்கு தனக்கு போதிய ஆதரவு இருந்தும், அப்போதைய மன்னர் சுல்தான் அப்துல்லா தன்னை அப்பதவிக்கு நியமிக்கவில்லை என கேலிக்குரிய வகையில் பேசியதாக கூறப்படுகிறது. இது தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாக பரவின.

இதையடுத்து, இந்த வழக்கு தொடர்பாக கோர்ட்டில் விசாரணை நடைபெற்றபோது, தன் மீதான தேச துரோக குற்றச்சாட்டுக்கு முஹ்யித்தீன் திட்டவட்டமாக மறுப்பு தெரிவித்தார். மேலும் இது தொடர்பாக விசாரணை நடத்தப்பட வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்தார். இந்தவழக்கில்முஹ்யித்தீனுக்குஜாமீன்வழங்கப்பட்டுள்ள நிலையில், வழக்கு விசாரணை நவம்பர் 4ந்தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# திருப்பூர் மாவட்ட பத்திரிகையாளர் நல மன்றத்தின் சார்பில் அரசு வேலை வாங்கி தரக்கோரி மனு

திருப்பூர், ஆக. 29

திருப்பூர் மாவட்ட பத்திரிக்கையாளர் நீதியின் குரல் உதயகுமார் உடல் நல குறைவால் காலமானார் அதனைத் தொடர்ந்து திருப்பூர் மாவட்ட பத்திரிகையாளர் நல மன்றம் சார்பாக பத்திரிக்கையாளர்களிடம் நிதி வசூல் செய்து சுமார் 11,000 திருப்பூர் மாவட்ட ஆட்சியர் கிறிஸ்துராஜ் அவர்களின் முன்னிலையில் உதயகுமார் அவர்களின் மனைவியிடம் மற்றும் குடும்பத்தாரிடம் கொடுக்கப்பட்டது இதனை அடுத்து அவர்களின் குடும்பத்திற்கு ஒரு அரசு வேலை வழங்க வேண்டி மனு அளிக்கப்பட்டுள்ளது இனி வரும் காலங்களில் பத்திரிக்கையாளர் யாரிடமும் நிதி வசூல் செய்யாமல் இருப்பதற்காக திருப்பூர் மாவட்ட பத்திரிக்கையாளர் நல மன்றம் சார்பாக உறுப்பினர் ஒவ்வொரு நபருக்கும் சுமார் பத்து லட்சம் இன்சூரன்ஸ் பாலிசி செய்து தருவதா கனி ராஜா மற்றும் முனைவர் மு. வரதராஜ் அவர்கள் தெரிவித்தனர்.



# அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 5 பேர் பலி: பாலஸ்தீன சுகாதார அமைச்சகம் தகவல்

கெய்ரோ, ஆக. 29

காசா முனையில் செயல்பட்டு வரும் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் கடந்த ஆண்டு அக்டோபர் 7ந்தேதி இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாத தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். மேலும், இஸ்ரேலில் இருந்து 251 பேரை பணய கைதிகளாக காசாமுனைக்கு ஹமாஸ் கடத்திச் சென்றது.

இதையடுத்து ஹமாஸ் ஆயுதக்குழு மீது போர் அறிவித்த இஸ்ரேல் ஒப்பந்த அடிப்படையில் பணய கைதிகள் 100க்கும் மேற்பட்டோரை மீட்டுள்ளது. மேலும், காசாவில் இஸ்ரேல் அதிரடி தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த போரில் காசாவில் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் உள்பட 40 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இதில் 93 ஆயிரத்துக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

இந்நிலையில், மேற்கு கரையின் துல்கர்ம் மாகாணத்தில் உள்ள நூர் ஷம்ஸ் அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 5 பேர் உயிரிழந்துள்ளதாக பாலஸ்தீன சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. நூர் ஷம்ஸ் அகதிகள் முகாமில் கொல்லப்பட்ட 5 பேரின் உடல்கள் துல்கர்ம் மாகாணத்தில் உள்ள அரசு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது.

முன்னதாக, கடந்த ஆண்டு அக்டோபரில் இஸ்ரேலிய ராணுவத்தின் நடவடிக்கைகளால் மேற்கு கரையில் மொத்தம் 632 பேர் உயிரிழந்ததாக பாலஸ்தீன சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# அரசியலில் விஜய் தாக்குப்பிடித்து மக்களிடம் நன்மதிப்பை பெறவேண்டும்: திருமாவளவன்

திருச்சி, ஆக. 29

விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல் திருமாவளவன் திருச்சி விமான நிலையத்தில் நிருபர்களிடம் கூறியதாவது:

தேசிய அளவில் மது விலக்கு கொள்கையை அமல்படுத்த வேண்டும் என வலியுறுத்தி அக்டோபர் 2ந் தேதி வி.சி.க சார்பில் மகளிர் மாநாடு நடத்தப்பட உள்ளது. இந்த மாநாட்டையொட்டி தமிழகம் முழுவதும் நான் சுற்றுப்பயணம் மேற்கொள்ள இருக்கிறேன். கட்சி சார்பற்ற ஜனநாயக சக்திகள் மதுவை ஒழிப்பதற்கும் போதை பொருட்களை ஒழிப்பதற்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிற அமைப்புகள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து தொடர் பரப்புரையில் ஈடுபட இருக்கிறோம்.

இந்த மாநாட்டுக்கு அனைத்து தரப்பு ஜனநாயக சக்திகளும் ஆதரவு நல்கிட வேண்டும் என்று வேண்டுகோள் விடுகிறேன். அமெரிக்க பயணம் மேற்கொள்ள இருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பயணம் வெற்றிகரமாக அமைய வேண்டும். தொழில் முதலீட்டு நிறுவனங்களுடன் சந்திப்பு வெற்றிகரமாக அமைய வேண்டும் என்று வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

வெளிநாடு செல்லும் முதல்வர் நிர்வாகத்தை கவனிப்பதற்காக துரைமுருகன் போன்ற மூத்த தலைவர்களை நியமிக்கலாம் என்ற விமர்சனம் எழுந்துள்ளது. 15 நாள் பயணம் மேற்கொள்கிறார் இந்த 15 நாட்களில் உலகில் எந்த மூலையில் இருந்தாலும் நிர்வாகத்தை கவனித்துக் கொள்கிற அளவுக்கான தொலைத்தொடர்பு வசதிகள் பெருகி உள்ள காலம் இது. எனவே. இது சம்பந்தமில்லாத ஒரு கோரிக்கையாக இருக்கிறது.

ஐ.ஏ.எஸ். போன்ற அதிகாரிகளை அவர்களின் சிறந்த ஆளுமைகளை ஆட்சி நிர்வாகத்தின் மேம்பாட்டுக்கு பயன்படுத்தாமல் மதுவை வியாபாரம் செய்வது, எப்படி? லாபத்தை பெருக்குவது எப்படி? கடைகளில் எண்ணிக்கையை பெருக்குவது எப்படி? என்பதற்கு



அந்த அதிகாரிகளில் சிந்தனை ஆற்றல் பயன்படுத்தப்படுகிறது. இது வேதனைக்குரியது.

சினிமாவிலேயே இருந்து அரசியலுக்கு வந்து ஆட்சியை கைப்பற்றி விட முடியும் என்கிற எண்ணம் நீண்ட காலமாக தமிழக அரசியலில் இருந்து வருகிற ஒன்றுதான். அந்த முயற்சியில் ஆந்திராவிலும் கூட என்.டி.ஆர்.யை பின்பற்றி பலர் வந்து பார்த்தார்கள்.

தமிழ்நாட்டிலே அப்படி பலர் முயற்சித்தும் அதில் வெற்றி பெற முடியவில்லை என்ற ஒரு விமர்சனம் இருக்கிறது. எம்.ஜி.ஆர். சினிமாவில் இருந்த காலத்திலேயே அரசியலில் தீவிரமாக ஈடுபாடு கொண்டிருந்தார். அதனால் அவர் அரசியலில் இருந்து அதாவது ஒரு ஒழுங்கு நடவடிக்கை என்கிற பெயரால் தி.மு.க.விலிருந்து வெளியேற்றப்பட்ட போது நீண்ட நெடிய அனுபவம் உள்ள பல தலைவர்கள் அவரோடு வெளியேறினார்கள்.

அவருடைய வெற்றிக்கு அது ஒரு காரணம். வெறும் சினிமா ரசிகர்களை, ரசிகர் மன்ற தலைவர்களை மட்டுமே வைத்துக் கொண்டு வர அரசியல் செய்யவில்லை. அவர் கட்சியை தொடங்குகிற போது தி.மு.க.விலிருந்து அவரோடு சேர்ந்து விலகிய பல அரசியல் தலைவர்கள் கட்சியை நிர்வாகத்தில் அனுபவம் உள்ளவர்கள் அவரோடு இருந்தார்கள். அதனால் வெற்றி பெற முடிந்தது.

அதன் பிறகு வந்த தலைவர்கள் அதாவது சினிமா மூலம் வந்த தலைவர்கள். அதில் பிரகாசிக்க முடியாமல் போனதற்கு அது ஒரு காரணம். தற்போது மக்களிடையே இருந்துள்ள சமூக ஊடகங்களின் வாயிலாக வளர்ந்துள்ள அரசியல் விழிப்புணர்வு இன்னொரு காரணம்.

விஜய் அரசியல் எவ்வளவு கடினமானது,

போராட்டங்கள் நிறைந்த ஒரு களம், என்பதை இனி நடைமுறையில் அவர் சந்திக்க நிறைய வாய்ப்புகள் உருவாகும். தாக்குப்பிடித்து அவர் நிற்க வேண்டும். மக்களுடைய நன்மதிப்பை பெற வேண்டும். இது எல்லாம் நிகழ்ந்த பிறகு தான் இது குறித்து நாம் ஒரு கருத்தை சொல்லப்படுகிறது.

முன்கூட்டியே நாம் ஒரு யூகத்தில் கணக்கு போட்டு சொல்ல முடியாது. அரசியலில் விஜய் வெற்றி பெறுவதற்கு என்னுடைய வாழ்த்துக்கள்.

பழனியில் இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் மாநாடு நடத்திருக்கிறார்கள். இந்த மாநாடு பல லட்சக்கணக்கான மக்களின் ஆதரவோடு வெற்றி பெற்று இருப்பதாகவும் தெரிகிறது. பாஜக . ஆர்.எஸ்.எஸ். போன்ற இயக்கங்கள் கடவுள்,மதம் ஆகியவற்றை பயன்படுத்தி மக்களை அரசியல் அடிப்படை வாக்கு வங்கியாக மாற்றுவதற்கு வட இந்திய மாநிலங்களில் எவ்வாறு முயற்சித்தார்களோ அதுபோல தமிழ்நாட்டிலும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

அப்படிப்பட்ட அந்த முயற்சிகளுக்கு இடம் அளிக்காமல் அவர்களின் அரசியல் சதியை அம்பலப்படுத்தக் கூடிய வகையிலே இந்து சமய அறநிலைத்துறை செயல்படுகிறது என்றால் அதை நாங்கள் வரவேற்க கடமைப்பட்டிருக்கிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

# 100 ராக்கெட்டுகள், 100 ஆளில்லா விமானங்கள்... உக்ரைன் மீது ரஷியா கடும் தாக்குதல்

கீவ், ஆக. 29

உக்ரைன் நாட்டின் மீது பெரிய அளவில் ஆளில்லா விமானங்கள் மற்றும் ராக்கெட்டுகள் ஆகியவற்றை கொண்டு ரஷிய படைகள் இன்று காலை திடீரென தாக்குதல் நடத்தியது. தொடர்ந்து பல மணிநேரம் நீடித்த இந்த தாக்குதல், பல வாரங்களாக இல்லாத வகையில் கடுமையான தாக்குதலாக பார்க்கப்படுகிறது.

இதில், உக்ரைன் நாட்டின் எரிசக்தி உட்கட்டமைப்பை இலக்காக கொண்டு ரஷியாவின் படைகள் தாக்குதலை தொடுத்துள்ளன. உக்ரைனின் கிழக்கு, வடக்கு, தெற்கு மற்றும் மத்திய பகுதிகளில் ரஷியா முன்னேறி சென்று தாக்குதலை நடத்தி உள்ளது. பல்வேறு பாலிஸ்டிக் ரக மற்றும் நவீன ராக்கெட்டுகள் கொண்டும் தாக்குதல் தொடர்ந்தது.

உக்ரைனின்தலைநகர்கீவில்குண்டுவெடிப்புசம்பவங்கள்கேட்டன. அந்நகரில் சில பகுதிகளில் மின் விநியோகத்திலும் இடையூறு ஏற்பட்டது. இதனை உக்ரைனின் விமான படை அதிகாரிகள் தெரிவித்தனர்.ரஷியாவின்நள்ளிரவுதாக்குதல்மற்றும்அதிகாலையிலும் தொடர்ந்த தாக்குதலுக்கு உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி இன்று கண்டனம் வெளியிட்டு உள்ளார்.

இதில், பல்வேறு வகைகளை சேர்ந்த 100 ராக்கெட்டுகள், 100 ஆளில்லா விமானங்கள் ஏவப்பட்டன. உக்ரைனின் கார்கீவ், கீவ் மற்றும் ஒடிசா உள்ளிட்ட நகரங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளன. நாட்டின் 15 பகுதிகள் என ஏறக்குறைய உக்ரைனின் பாதிக்கும் மேற்பட்ட பகுதி மீது தாக்குதல் நடத்தப்பட்டு உள்ளது. பல்வேறு கட்டிடங்கள், எரிசக்தி உட்கட்டமைப்புகள் சேதமடைந்து உள்ளன. இதில் 3 பேர் பலியாகி உள்ளனர். 13 பேர் காயமடைந்து உள்ளனர்.



கோவை மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் 35க்குட்பட்ட புதிய நெசவாளர் காலனி மூகாம்பிகை நகர் பகுதிகளில் நடைபெற்றுவரும் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் மற்றும் சேதமடைந்துள்ள மழைநீர் வடிகால்கள் ஆகியவற்றை மேயர் ரங்கநாயகி ராமச்சந்திரன் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தினகனி



# 100 நாள் வேலைத்திட்டத்தில் தமிழகத்துக்கு 3வது இடம்



சென்னை, ஆக. 29

கிராமப்புறத்தைச் சேர்ந்தவர்களுக்கு வாழ்வாதாரத்துக்கான வேலை வாய்ப்பு வழங்கும் விதமாக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டம் கடந்த 2005ம் ஆண்டு மத்திய அரசால் கொண்டு வரப்பட்டது. இந்த திட்டம் தமிழகத்தில் 100 நாள் வேலை திட்டம் என்று அழைக்கப்படுகிறது. இந்த திட்டத்தில் நாடு முழுவதும் 13.13 கோடி பயனாளிகள் உள்ளனர்.

தமிழகத்தில் மட்டும் 89 லட்சத்து 3 ஆயிரத்து 310 பயனாளிகள் இருக்கிறார்கள். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தில் பெண்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. அவர்களின் பங்கேற்பை எளிதாக்க குழந்தைகள் காப்பகத்திற்கான ஏற்பாடு, இருப்பிடம் அருகிலேயே பணி என்பது உள்பட பல்வேறு வசதிகள் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளது.

எலக்ட்ரானிக்ஸ் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தரவு தளம், கடந்த நிதி ஆண்டில் (202324) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தில் பெண்களின் பங்கேற்பு தொடர்பாக மாநிலங்கள் வாரியான விவரத்தை வெளியிட்டுள்ளது. அதில், 89.27 சதவீதம் பெற்று கேரளா முதல் இடத்தில் உள்ளது.

87.39 சதவீதம் பெற்று புதுச்சேரி 2ம் இடத்திலும், 86.66 சதவீதம் பெற்று தமிழகம் 3ம் இடத்திலும் உள்ளது. மிகவும் குறைவாக ஜம்மு காஷ்மீர் 32.16 சதவீத பங்களிப்பு மட்டுமே கொடுத்திருக்கிறது. கேரளா, புதுச்சேரி, தமிழ்நாடு மற்றும் கோவா ஆகிய 4 மாநிலங்கள் மட்டுமே 70 சதவீதத்துக்கு அதிகமான பெண்களின் பங்கேற்பினை தந்திருக்கின்றன. 50 முதல் 70 சதவீத பங்களிப்பினை 16 மாநிலங்களும், 50 சதவீதத்துக்கு குறைவான பங்களிப்பினை 14 மாநிலங்களும் வழங்கியிருக்கின்றன.

# அண்ணாமலை உருவபொம்மை எரிப்பு: அதிமுகவினர் போலீசார் இடையே தள்ளுமுள்ளு



மானாமதுரை, ஆக. 29

கடந்த இரண்டு நாட்கள் முன்பு அண்ணாமலை எதிர்கட்சியான அ.தி.மு.க பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அவதூறாக பேசியதாக கூறியுள்ளார்.

இந்நிலையில் சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில், அதிமுக நிர்வாகிகள் சுமார் 50 க்கும் மேற்பட்டோர் அண்ணாமலையின் உருவபொம்மையை நடு ரோட்டில் வைத்து எரித்தும், காலணிகளால் அடித்தும் அதிமுகவினர் எதிர்ப்புகளை தெரிவித்தனர்.

அப்போது இதை தடுக்க முயன்ற போது போலீசாருக்கு, அதிமுகவினருக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டதுடன் வாக்குவாதம் ஏற்பட்டது.

இதேபோல் தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில், பாஜக மாநில தலைவர் அண்ணாமலையை கண்டித்து நடைபெற்ற போராட்டத்தில் அதிமுகவினருக்கும், போலீசாருக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. பழைய பேருந்துநிலையம்அருகே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், அண்ணாமலை உருவ பொம்மையை அதிமுகவினர் எரிக்க முயன்றனர்.

அப்போது போலீசாருக்கு, அதிமுகவினருக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டதுடன் வாக்குவாதம் ஏற்பட்டது. இதனையடுத்து போராட்டத்தில் ஈடுபட்ட அதிமுகவினரை போலீசார் கைது செய்தனர்.

மேலும் ராணிப்பேட்டை, அருப்புக்கோட்டை, விராலிமலை, புதுக்கோட்டை ஆகிய ஊர்களிலும் அண்ணாமலையை எதிர்த்து அதிமுகவினர்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# பாஜக அரசை கண்டித்து காங்கிரஸ் கண்டன ஆர்ப்பாட்டம்: செல்வபெருந்தகை அறிவிப்பு



சென்னை, ஆக. 29

தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப் பெருந்தகை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

ஒன்றிய அரசு மாநிலங்களிடையே திணித்த புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக் கொள்ளாத மாநிலங்களுக்கு நிதி வழங்க மறுத்து வருகிறது.

நடப்பாண்டிற்கான முதல் தவணை ஜூன் மாதத்தில் விடுவித்திருக்க வேண்டும். அப்படி விடுவிக்காத நிலையில் ஒன்றிய அரசுக்கு உடனடியாக நிதியை விடுவிக்குமாறு பலமுறை கடிதங்கள் மாநில அரசால் எழுதப்பட்டது. புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக் கொள்ளவில்லை என்ற ஒரே காரணத்திற்காக தமிழ்நாடு வஞ்சிக்கப்பட்டு வருகிறது. இதை தமிழ்நாடு காங்கிரஸ் சார்பாக வன்மையாக கண்டிக்கிறேன்.

கல்வி முறையை சீரழிக்கிற வகையில் சமக்ரா சிக்ஷா அபியான் திட்டத்திற்கு பாராளுமன்ற பட்ஜெட் மூலம் ஒதுக்கப்பட்ட தொகையை மாநில அரசுக்கு ஒதுக்காமல் இருப்பது அரசமைப்புச் சட்டத்திற்குவிரோதமானதாகும். நீட் திணிப்பால் தமிழக மாணவர்கள் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகி வருகிறார்கள்.

இதையொட்டி புதிய கல்விக் கொள்கை திணிப்பினால் தமிழகத்திற்கு ஒதுக்க வேண்டிய நிதியை ஒதுக்க மறுக்கிற ஒன்றிய அரசை கண்டித்து தமிழ்நாடு மாணவர் காங்கிரஸ் சார்பாக உடனடியாக நிதியை விடுவிக்குமாறு ஒன்றிய பா.ஜ.க. அரசை கோரி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# காங்கிரஸ் கமிட்டியின் செயலாளர் ராபின்சன் தாயார் மறைவு விஜய் வசந்த் எம்.பி. அஞ்சலி




கன்னியாகுமரி, ஆக. 29

பாராளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த் சமூக வலைதளத்தில் கூறியிருப்பதாவது:

திருவட்டார் கிழக்கு வட்டாரகாங்கிரஸ் கமிட்டியின் செயலாளர் ராபின்சன் அவர்களின் தாயார் டாட்டி பாய் அவர்கள் மறைந்த செய்தி அறிந்து அவர்கள் இல்லத்திற்கு சென்று உடலுக்கு மலர் மாலை அணிவித்து இறுதி அஞ்சலி செலுத்தி அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தேன்.

# நடுக்கடலில் மீனவர்களை தாக்கி ரூ.4 லட்சம் உபகரணங்கள் பறிப்பு



நாகப்பட்டினம், ஆக. 29

தமிழக மீனவர்கள் தங்களது வாழ்வாதாரத்திற்காக கடலுக்கு சென்று மீன் பிடித்து வருகின்றனர். அவ்வாறு அவர்கள் கடலுக்கு செல்லும்போது இலங்கைகடற்கொள்ளையர்கள் தாக்குதல் மற்றும் எல்லை தாண்டி வந்ததாக கூறி மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்யும் சம்பவங்கள்அவ்வப்போது, தொடர்ந்து நடைபெற்று வருகிறது. நாகப்பட்டினம் மாவட்டம், செருதூர் மீனவ கிராமத்தை சேர்ந்தவர் தங்கதுரை. இவர் தனக்கு சொந்தமான பைபர் படகில் தனது மகன் மணிகண்டபிரபு, அதே பகுதியை சேர்ந்த கங்காதரன் ஆகியோருடன் நேற்று காலை கடலுக்கு மீன்பிடிக்க சென்றார்.

இந்நிலையில் நேற்று மாலை அனைவரும் கோடியக்கரை தென்கிழக்கே சுமார் 15 நாட்டிக்கல் மைல் தொலைவில் மீன்பிடித்து கொண்டிருந்தனர். அப்போது 3 படகுகளில் வந்த இலங்கை கடற்கொள்ளையர்கள் 9 பேர் பயங்கர ஆயுதங்களால் தாக்கி உள்ளனர்.

தொடர்ந்து, ஜி.பி.எஸ். கருவி, வாக்கி டாக்கி, வலை, செல்போன் உள்ளிட்ட ரூ.4 லட்சம் மதிப்பிலான மீன்பிடி உபகரணங்களை திருடிக் கொண்டு அங்கிருந்து தப்பினர்.

அதனை தொடர்ந்து, காயமடைந்த மீனவர்கள் செருதூர் மீன்பிடி இறங்கு தளத்திற்கு வந்தனர். பின்னர், சக மீனவர்கள் அவர்களை நாகை அரசு மருத்துவக் கல்லூரி ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். இது குறித்து தகவல் அறிந்ததும் மீனவர்களின் குடும்பத்தினர் கதறி அழுதனர்.

வாழ்வாதாரத்திற்காக கடலுக்கு மீன்பிடிக்க செல்லும் எங்களுக்கு சுதந்திரமாக மீன்பிடிக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மீனவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு கடலுக்கு சென்ற மீனவர்கள் இலங்கை கடற்படை கைது செய்தது. அந்த சம்பவம் நடந்து சில நாட்களுக்குள் மீண்டும் நாகை மீனவர்கள் இலங்கை கடற்கொள்ளையர்களால் தாக்கப்பட்டது சக மீனவர்கள் மத்தியில் கலக்கத்தையும், அச்சத்தையும் ஏற்படுத்தி உள்ளது.

# சென்னை விமான நிலையத்தில் ஒரே நேரத்தில் 2 ஓடு பாதைகளும் செயல்பாட்டுக்கு வந்தன

ஆலந்தூர், ஆக. 29

சென்னைவிமானநிலையத்தில் 2 ஓடுபாதைகள் செயல்பாட்டில் உள்ளன. அதில் முதல் ஓடுபாதை 3.66 கிலோமீட்டர் நீளமும், 2வது ஓடுபாதை 2.89 கிலோ மீட்டர் நீளமும் உடையது.

இதில் பிரதான ஓடுபாதையான முதல் பாதையில் பெரிய ரக விமானங்கள் வந்து தரையிறங்கி, புறப்பட்டு வருகின்றன. 2வது ஓடுபாதையில் ஏ.டி.ஆர். எனப்படும் 76 இருக்கைகள் கொண்ட சிறிய ரக விமானங்கள், மற்றும் தனியாரின், தனி விமானங்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் 2 ஓடு பாதைகளையும் ஒரே நேரத்தில் இயக்குவதற்கான நடவடிக்கைகளை, விமான நிலைய ஆணையம் நடவடிக்கை எடுத்து வந்தது. இதற்கு வசதியாக சென்னை விமான நிலையத்தில் தரையிறங்கும் விமானங்கள், ஒரு ஓடுபாதையில் இருந்து, மற்றொரு ஓடுபாதைக்கு செல்ல, "டாக்சி வே"என்ற இணைப்புப் பாதைகள் பயன்படுத்தப்படுகிறது.

இந்த டாக்சி வே "பி" என்ற "பிராவோ"முதல் ஓடு பாதைக்கு நேராக செல்லாமல், வளைந்து செல்லும் வகையில் இருந்தது. இதனால் தரையிறங்கும் மற்றும் புறப்படும் விமானங்கள், டாக்சி வேயில், வேகமாக செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. இதையடுத்து இந்த டாக்சிவே 'பி' யை, நேர்படுத்தும் பணிகள் நடந்தன.

தற்போது அந்தப் பணிகள் நிறைவடைந்து உள்ளன. இதனால் தற்போது சென்னை விமான நிலையத்தில் ஒரே நேரத்தில், இரண்டு ஓடுபாதைகளும் முழுமையாக பயன்பாட்டிற்கு வந்து உள்ளன.

இதைத்தொடர்ந்து சென்னை விமான நிலையத்தில் 2வது ஓடுபாதையிலும் விமான சேவைகளின் எண்ணிக்கைகள் படிப்படியாக அதிகரித்து வருகிறது. இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இந்த பாதையில் 615 விமானங்கள் இயக்கப்பட்டன.

ஆனால் இந்த ஜூன் மாதத்தில் 952 விமானங்களாக அதிகரித்துள்ளன. வரும் மாதங்களில் 2வது ஓடுபாதையில் இயக்கப்படும் விமானங்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.

இதன் மூலம் சென்னை விமான நிலையத்தில், விமானங்கள் வந்து தரையிறங்குவது, புறப்படும் எண்ணிக்கைகள் மேலும் அதிகரிக்கும். சென்னை விமான நிலையத்தில் ஏற்கனவே ஒரு மணி நேரத்தில், 30 விமானங்கள் இயக்கப்பட்டு வந்தநிலையில், தற்போது ஒரு மணி நேரத்திற்கு சுமார் 50க்கும் மேற்பட்ட விமானங்கள் இயக்கப்படுகின்றன.

இதனால் சென்னை விமான நிலையத்தில், இயக்கப்பட்டு வரும் விமானங்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்க இருப்பதோடு, விமானங்கள் புறப்பாடு, தரை இறங்குவதில் தாமதங்கள் ஏற்படாமல், விமானங்கள் குறித்த நேரத்தில் இயக்கப்படும் என்று சென்னை விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.

# வெளிநாடு சென்றாலும் சண்டை தொடரும்: அண்ணாமலை



சென்னை, ஆக. 29

முதலீடுகளை ஈர்ப்பதற்காக தமிழக முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்று அமெரிக்கா சுற்றுப்பயணம் செல்கிறார். முதலமைச்சர் பயணம் குறித்து தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை விமர்சனம் செய்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது:

கடந்த 3 முறை பயணம் தோல்வியில் முடிந்ததை போல் அமெரிக்க பயணமும் தோல்வியில் முடிந்துவிடக்கூடாது. பெரிய திட்டங்களுடன் அமெரிக்கா செல்லும் முதல்வர் ஏதேனும் நன்மையை தமிழகத்திற்கு கொண்டுவருகிறாரா என பார்ப்போம். அமெரிக்காவில் அதிக தமிழர்கள் உள்ளனர். அவர்களிடம் பேசினாலே ஆயிரக்கணக்கான முதலீடுகளை தமிழகம் கொண்டுவரலாம்.

முதலமைச்சரின் முதல் 3 வெளிநாடு பயணத்தையும் தோல்வி பயணமாக தான் பார்க்கிறேன். சிங்கப்பூர், ஜப்பான், ஸ்பெயின் பயணங்களை மேற்கொண்ட முதலமைச்சர் வெள்ளை அறிக்கை வெளியிடாதது ஏன். கடந்த வெளிநாட்டு பயணங்களில் பெறப்பட்ட முதலீடுகள் எவ்வளவு? அதன் தற்பொதைய நிலை குறித்து வெள்ளை அறிக்கை தேவை.

கடந்த 5 ஆண்டுகளில் மத்திய அரசு மூலம் RTE உள்ளிட்ட திட்டங்களுக்கு ரூ.5,000 கோடி வழங்கப்பட்டுள்ளது. இத்தனை வருடங்களாக Right to education மூலம் பணம் வந்திருக்கிறது. திமுக அரசு நாடகம் ஆடுவதாக அண்ணாமலை.

நவீன மயமாக்கப்பட்ட மாநில அரசு PM Shree பள்ளிகள் தமிழகத்திற்கு வேண்டும் என ஒத்துக்கொண்டுள்ளது. திட்டத்திற்கு ஒத்துக் கொண்ட தமிழக அரசு மும்மொழி கொள்கை இருப்பதால் கையெழுத்திட மறுக்கிறது.

ஆக்ஸ்போர்டு பல்கலைகழகத்தில் மேல் படிப்பு படிக்க 3 மாதம் சென்றாலும் என் இதயம் தமிழ்நாட்டில் தான் இருக்கும். மேல் படிப்பிற்காக லண்டன் சென்றாலும் அறிக்கை மூலம் பேசிக் கொண்டே இருப்பேன் என பாஜக மாநிலத்தலைவர் அண்ணாமலை கூறியுள்ளார்.

மாணவனாக ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் இருந்தாலும் எனது சண்டை தொடரும், அறிக்கை மூலம் பேசுவேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

# தமிழ்நாட்டில் மத்திய அரசு சுங்ககட்டண உயர்வை மறுபரிசீலனை செய்ய வேண்டும் ஜி.கே.வாசன் வலியுறுத்தல்

சென்னை, ஆக. 29

த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன் வெளியிட்டு உள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

தமிழ்நாட்டில் 25 சுங்கச்சாவடிகளில் செப்டம்பர் 1ந் தேதி முதல் கட்டணம் உயர்த்தப்படுவதாக செய்திகள் வெளியாகி உள்ளது.

தேசிய நெடுஞ்சாலை ஆணையம் ஒவ்வொரு சுங்கச் சாவடியிலும் 5 சதவீதம் முதல் 7 சதவீதம் வரை சுங்கக் கட்டணம் உயர்த்தப்படும் என அறிவித்துள்ளது. அதாவது சுங்கக்கட்டணம் உயர்வால் வாகன ஓட்டிகள் ரூ. 50 முதல் ரு. 150 வரை கூடுதல் கட்டணம் செலுத்த வேண்டியிருக்கும். இதனால் வாகன உரிமையாளர்களுக்கு பொருளாதாரத்தில் கூடுதல் சுமை ஏற்படும்.

இக்கட்டண உயர்வால் சரக்குக்கட்டணம் உள்ளிட்ட போக்குவரத்துக்கான செலவும் அதிகமாகும். சுங்கக்கட்டண உயர்வால் அத்தியாவசியப் பொருட்களின் விலை உள்ளிட்ட பல்வேறு பொருட்களின் விலை உயரும். இதனால் விவசாயிகள் உள்ளிட்ட அனைத்து தரப்பு மக்களும் பாதிக்கப்படுவார்கள்.

குறிப்பாக சுங்கக்கட்டண உயர்வினால் சாதாரண ஏழை, எளிய மக்கள் பெருமளவு பாதிக்கப்படுவார்கள்.

மத்திய அரசு, தேசிய நெடுஞ்சாலை ஆணையம் வெளியிட்ட சுங்கக்கட்டண உயர்வை திரும்ப பெற, மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று தமிழ் மாநில காங்கிரஸ் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

# Zero Accident Day விழிப்புணர்வு ஏற்படுத்திய போக்குவரத்து போலீசார்



சென்னை, ஆக. 29

சென்னையின் வாகன ஓட்டிகளிடையே விழிப்புணர்வு மற்றும் சமூகப் பொறுப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில், Zero accident day என்ற வாசகத்துடன் கூடிய ZAD விழிப்புணர்வு பிரசாரம், சென்னை பெருநகர போக்குவரத்து காவல்துறையினரால் தொடங்கப்பட்டது. இந்த விழிப்புணர்வு பிரசாரமானது ஆகஸ்ட் 5 தொடங்கி ஆகஸ்ட் 25ந்தேதி வரை 20 நாட்களுக்கு நடைபெற்றது.

Zero accident day என்ற வாசகத்துடன் கூடிய ZAD விழிப்புணர்வு பிரசாரம் குறித்து வேப்பேரி டிராபிக் இன்ஸ்பெக்டர் விளக்கம் அளித்தார். அவர் கூறுகையில்,

சென்னை வேப்பேரி போக்குவரத்து காவல் ஆய்வாளர்கள் 5.8.2024 முதல் இன்று வரைக்கும் 26.8.2024வரைசென்னை பெருநகரத்தில் உயர் அதிகாரிகளின் உத்தரவுபடி பல நிகழ்ச்சிகள், விழிப்புணர்வு நடத்தி இருக்கிறோம்.

ஹெல்மெட், சீட் பெல்ட் அணிவது விழிப்புணர்வு செய்து இருக்கிறோம்.

ஆகஸ்ட் 26ந்தேதி ZAD (Zero accident day) 20 நாட்கள் விழிப்புணர்வு செய்து இருக்கிறோம்.

சென்னை பெருநகர மக்கள் அனைவருக்கும் ZAD (ஆக. 26) (Zero accident day) என்று அனைவருக்கும் உணர்த்தி இருக்கிறோம்.

இரு சக்கர வாகனத்தில் செல்பவர்கள் ஹெல்மெட் அணிய வேண்டும். காரில் செல்வபவர்கள் சீட் பெல்ட் அணிய வேண்டும். அவசரமாக செல்ல வேண்டும் என்று ஓவர் ஸ்பீடு செல்லக்கூடாது என்று பல நிகழ்ச்சிகள் நடத்தி அனைவருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தி இருக்கிறோம் என்று கூறினார்.

# அ.தி.மு.க.வை தொட்டுப் பார்த்தால் கெட்டுப் போவார்கள்: ஜெயக்குமார்

சென்னை, ஆக. 29

அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் டி.ஜெயக்குமார் சென்னையில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

அ.தி.மு.க. மாபெரும் இயக்கமாகும். அந்த இயக்கத்தை ஒழிக்க யாராலும் முடியாது. கருணாநிதியின் முப்பாட்டனாலும் முடியவில்லை. அப்பாவாலும் முடியவில்லை. எனவே அண்ணாமலையின் அப்பாவாலும் முடியாது. அவரது அப்பாவின் முப்பாட்டனாலும் முடியாது. அ.தி.மு.க.வை தொட்டுப் பார்த்தால் அவர்கள் நிச்சயம் கெட்டுப் போவார்கள்.

எனவே ஏழேழு ஜென்மம் அண்ணாமலை எடுத்தாலும் அ.தி.மு.க.வை அழிக்க முடியாது. அண்ணாமலை 3 வயது குழந்தை. இந்த குழந்தை 52 ஆண்டு அனுபவம் பெற்ற ஆலமரம் போன்று இருக்கும் இயக்கத்தை அழிக்காமல் விட மாட்டேன் என்று பேசுவது விரக்தியின் வெளிப்பாடாகும்.

அண்ணாமலை லண்டன் செல்கிறார். ஸ்டாலின் அமெரிக்கா செல்கிறார். இருவரும் அங்கு போய் என்ன பேசப் போகிறார்கள்? என்று தெரியவில்லை. இங்கு பேசினால் தெரிந்து விடும் என்பதால் அங்கு போய் பேசப் போகிறார்களா? என்பதும் தெரியவில்லை.

இதன் மூலம் ஒரு மேலாளரை விடுவித்துள்ளனர். ஒரு கட்சியின் மேலாளர் போன்ற பொறுப்பில் இருக்கும் அண்ணாமலை, 2 கோடி தொண்டர்களை கொண்டுள்ள மாபெரும் இயக்கத்தின் தலைவரான பொதுச் செயலாளரை இழிவாக பேசுகிறார். இதனால் பியூஸ் போன பல்பாகவே அண்ணாமலையை நாட்டு மக்கள் பார்க்கிறார்கள். எனவே வாய் ஜாலம் சவால், உதார் எல்லாமே வெறும் பேச்சு தான். ஆட்சி என்பது உங்களுக்கு பகல் கனவுதான். கோட்டை பக்கமே செல்ல முடியாது. ஒரு எம்.எல்.ஏ. சீட் கூட பா.ஜனதாவால் ஜெயிக்க முடியாது. அண்ணாமலையின் பேச்சு தொனி சரியாக இல்லை. அரசியலில் விமர்சனங்கள் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். அ.தி.மு.க.வை எந்த கொம்பனாலும் அழிக்க முடியாது. இவ்வாறு டி.ஜெயக்குமார் கூறினார்.

# நிலஅதிர்வு வீடுகள் குலுங்கியதால் பொதுமக்கள் அதிர்ச்சி

திருப்பூர், ஆக. 29

திருப்பூர் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் நேற்று பலத்த சத்தத்துடன் பல்வேறு இடங்களில் நில அதிர்வு ஏற்பட்டது. இந்த நில அதிர்வு திருப்பூர் நாச்சிபாளையம் பகுதியில் செயல்பட்டு வரும் டிபார்ட்மெண்ட் ஸ்டோரில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கேமராவில் பதிவானது. அதில் நில அதிர்வு ஏற்பட்டபோது கடையின் ஷட்டர், தகரம் சீட்டுகள் குலுங்கிய காட்சிகள் பதிவாகியுள்ளன.

திருப்பூர் காங்கேயம் சாலை நாச்சிபாளையம் பகுதியில் சுமார் 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். குறிப்பாக நேற்று மாலை நில அதிர்வு உணரப்பட்ட போது பல்வேறு வீடுகளில் பொருட்கள் நகர்ந்துள்ளது. இதனால் அப்பகுதி மக்கள் அச்சத்தில் உள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக சமூக வலைதளங்களில் பல்வேறு பதிவுகளை பதிவிட்டு வருகின்றனர்.

அதில் தங்களது பகுதியில் பலத்த சத்தத்துடன் ஏற்பட்ட நில அதிர்வு, இயற்கையாகவே ஏற்பட்ட நில அதிர்வா? இல்லை கல்குவாரியில் பாறைகளை பெயர்ப்பதற்காக வைக்கப்பட்ட வெடிச்சத்தமா? என பல்வேறு கேள்விகளை எழுப்பி பதிவிட்டு வருகின்றனர்.

இதேப்போல் திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் நேற்று மாலை ஊரே குலுங்கும் வகையில் அதி பயங்கர வெடி சத்தம் கேட்டது. இந்த சத்தமானது சுமார் 70 கிலோமீட்டர் தொலைவிலுள்ள 80க்கும் மேற்பட்ட கிராமங்களில் உணர முடிந்ததாக பொது மக்கள் தெரிவித்தனர். அப்போது வீடுகளில் இருந்த பொருட்கள், பீரோ ஆகியவை நகர்ந்ததாக தெரிவித்தனர்.

இந்த வெடி சத்தமானது வானில் விண்கற்கள் ஒன்றுடன் ஒன்று மோதி கொண்டதால் ஏற்பட்ட சத்தமா? அல்லது தாராபுரம் அருகே புகளூர் பவர்கிரிட் நிறுவனத்தில் அதிக சக்தி கொண்ட மின் டிரான்ஸ்பார்மர்களில் மின் அழுத்தத்தால் ஏற்பட்ட சத்தமாக இருக்குமா? அல்லது நில அதிர்வு காரணமா? என ஒருவருக்கு ஒருவர் செல்போன் மூலம் விசாரித்தனர். இதுகுறித்து தாராபுரம் காவல் துறை, வருவாய் துறை சார்பில் முறையான விளக்கம் பொது மக்களுக்கு அளிக்கப்படவில்லை என கூறப்படுகிறது. பயங்கர சத்தம் கேட்டதும் தாராபுரம் நகர் குடியிருப்பு பகுதியில் இருந்த பொது மக்கள் வீட்டை விட்டு அலறி அடித்தபடி வெளியே அதிர்ச்சியுடன் ஓடி வந்தனர். தாராபுரம், மூலனூர், குண்டடம் மற்றும் அதனை சுற்றியுள்ள 80க்கும் மேற்பட்ட நகர் மற்றும் கிராம பகுதிகளில் பதற்றம் ஏற்பட்டது. இரவு முழுவதும் பொதுமக்கள் பலர் தூங்காமல் தவித்தனர் . இது குறித்து பொது மக்கள் கூறுகையில்,

தாராபுரம் நகர் பகுதியில் வீட்டில் இருந்து கொண்டிருந்தபோது திடீரென ஒரு பயங்கரமான வெடிசத்தம் கேட்டது. இந்த வெடிச்சத்தம் மூன்று முறை தொடர்ச்சியாக கேட்டது. ஒரு நிமிடங்கள் வரை சத்தம் நீடித்தது.

இதுகுறித்து வெளியில் வந்து அக்கம் பக்கத்தில் விசாரித்த போது அவர்களும் வெடிச்சத்தம் கேட்டது என தெரிவித்தனர். அதன்பிறகு வருவாய்த் துறை அதிகாரிகளிடம் கேட்ட போது அவர்களுக்கு எதனால் வெடிச்சத்தம் ஏற்பட்டது என்பது குறித்து தெரியவில்லை. விசாரித்து வருவதாக தெரிவித்தனர்.

மீண்டும் வெடிச்சத்தம் கேட்குமோ? என பயத்தில் உள்ளோம். இதய நோயாளிகள், பலவீனமானவர்கள் முதியவர்கள், பச்சிளம் குழந்தைகளுக்கு இந்த வெடிச்சத்தம் பாதிப்பை ஏற்படுத்துமோ? என அச்சமாக உள்ளது. இரவில் நிலநடுக்கம் அல்லது கல் குவாரிகளில் ஆழ்துளையிட்டு வெடி வைக்கிறார்களா? அல்லது வேறு ஏதாவது காரணங்களா என அதிகாரிகள் விசாரித்து பொதுமக்களின் பதட்டத்தை போக்க வேண்டும். புவியியல் துறையினர் ஆய்வு செய்ய வேண்டும் என்றனர்.

இது குறித்து வருவாய்த் துறை அதிகாரிகள் கூறுகையில், திருப்பூர் மாநகர் மற்றும் தாராபுரம், காங்கயம் உள்ளிட்ட பகுதியில் ஏற்பட்ட பயங்கர சத்தம் குறித்து ஆய்வு செய்து வருகிறோம். சூலூர் விமான படை தளத்தில் இருந்து பறக்கும் போர் விமானங்களால் அவ்வப்போது பயங்கர சத்தம் கேட்டது. நேற்று ஏற்பட்ட சத்தம் போர் விமானங்களால் ஏற்படவில்லை. எனவே அது குறித்து இன்று ஆய்வு செய்கிறோம். நில அதிர்வு ஏற்பட்டதா என்பது குறித்து ஆய்வு செய்யப்படுகிறது. திருப்பூர் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் ஏற்பட்ட சத்தத்திற்கு பிறகு ஒரு மணி நேரத்தில் அசாம் மாநிலத்தில் நில அதிர்வு ஏற்பட்டுள்ளது. அது ரிக்டர் அளவுகோலில் 2ஆக பதிவாகி உள்ளது. எனவே நில அதிர்வு ஏற்பட்டதா? என்பது குறித்து ஆய்வு செய்யப்படும் என்றனர்.

# ஃபார்முலா 4 கார் பந்தயத்துக்கு எதிரான வழக்கு உயர்நீதிமன்றத்தில் விசாரணை

சென்னை, ஆக. 29

சென்னையில் வரும் ஆகஸ்ட் 31ம் தேதி ஃபார்முலா 4 கார் பந்தயத்தை நடத்த தமிழக விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் முடிவு செய்துள்ளது. ஏற்கனவே கடந்த டிசம்பர் மாதம் நடக்கவிருந்த போட்டி ஒத்தி வைக்கப்பட்ட நிலையில், அந்த போட்டியை நடத்த திட்டமிடப்பட்டது. ஃபார்முலா 4 கார் பந்தயம் நடத்த எதிர்ப்பு தெரிவித்து பாஜக செய்தி தொடர்பாளர் வழக்கு தொடர்ந்தார். வழக்கை அவசரமாக விசாரிக்க வேண்டும் என பாஜக செய்தி தொடர்பாளர் B.N.S. பிரசாத் முறையீடு செய்த நிலையில், நாளை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என உயர் நீதிமன்ற பொறுப்பு தலைமை நீதிபதி அமர்வு ஒப்புதல் அளித்துள்ளது.

# காளை மாட்டு சிலையை கயிறு கட்டி இழுத்த முதியவர்

அந்தியூர், ஆக. 29

ஈரோடு ரெயில் நிலையம் அருகே காளை மாட்டு சிலை ரவுண்டானா உள்ளது. இந்த பகுதி ஈரோட்டின் மைப்பகுதியில் அமைந்துள்ளதால் இங்கு எப்போது பரபரப்பாக காணப்பட்டு வருகிறது.



மேலும் இந்த வழியாக கரூர் உள்ளிட்ட பகுதிகளுக்கு செல்லும் பகுதியாக அமைந்துள்ளதால் பஸ்கள், கார், இரு சக்கர வாகனங்கள் அதிகளவில் சென்று வருகிறது.

அதே போல் ரெயில் நிலையத்தில் இருந்து பஸ் நிலையம், கடை வீதி, மணிக்கூண்டு, பன்னீர் செல்வம் பார்க் உள்ளிட்ட பகுதிகளுக்கு செல்லும் வானங்கள் பெரும்பாலும் இந்த வழியாகத்தான் சென்று வருகிறது.

கொல்லம் பாளையம், சோலார் மற்றும் பல்வேறு பகுதிகளில் இருந்து பஸ் நிலையம் மற்றும் ரெயில் நிலையம் செல்லும் மக்கள் காளை மாட்டு சிலை வழியாக சென்று வருகிறார்கள். இதனால் இந்த பகுதியில் மக்கள் நடமாட்டம் 24 மணி நேரமும் இருந்து கொண்டே உள்ளது.

மேலும் இந்த ரவுண்டானா பகுதியில் தமிழர்களின் வீர விளையாட்டை குறிக்கக்கூடிய ஜல்லிக்கட்டை நினைவு கூறும் வகையில்காளைமாட்டை வாலிபர் அடக்குவது போன்று சிலை அமைக்கப்பட்டு இருக்கிறது. இந்த சிலை ஈரோட்டின் மையப்பகுதியில் மிகவும் கம்பீரமாக இருந்து வருகிறது. இந்த சிலை ஈரோட்டின் நினைவு சின்னமாகவும் இருந்து வருகிறது.

இந்த நிலையில் காளை மாட்டை அடக்கும் இந்த சிலையை முதியவர் ஒருவர் கயிறு கட்டி இழுத்து கொண்டு இருந்தார். தொடர்ந்து அவர் காளையை அடக்குபவரிடம் அவர் பேசுவது போன்றும் அவர் தொடர்ந்து காளை மாட்டு சிலையை கயிறு கட்டி சுற்றி கொண்டே இருந்தார்.

இந்த வீடியோதற்போது வாட்ஸ்அப், பேஸ்புக் போன்ற சமூக வலைதளங்களில் வைரல் ஆகி வருகிறது. இதனை பார்த்த பொதுமக்கள் ஈரோட்டில் இருக்கும் காளை மாட்டின் உரிமையாளர் கிடைத்து விட்டார் என்றது போன்ற பதிவிட்டு வருகின்றனர்.

அந்த வீடியோவில் முதியவர் காளையை அடக்குபவரிடம் பேசுவது போன்றும்காளை மாட்டை அடக்கியதற்கு பாராட்டு தெரிவிப்பது போன்றும் காட்சி பதிவாகியுள்ளது.

அந்த முதியவர் மது போதையில் இருந்தாரா? என தெரியவில்லை. இதை அந்த வழியாக சென்ற வாகன ஓட்டிகள் வேடிக்கை பார்த்தவாறு சென்றனர்.

இதையடுத்து அந்த முதியவர் அங்கு இருந்து சென்று விட்டார்.

# போலி வாக்களர் அட்டை தயாரித்து கொடுத்த வாலிபர் கைது




குன்னம், ஆக. 29

லப்பைக்குடிக்காட்டில் போலியாக வாக்காளர் அட்டையை தயாரித்து கொடுத்த கம்ப்யூட்டர் சென்டர் கடை உரிமையாளரை போலீசார் கைது செய்தனர்.

பெரம்பலூர் மாவட்டம், லப்பைக்குடிக்காடு அபுபக்கர் தெரு பேரூரை சேர்ந்தவர் முகமது சமீம் (வயது 33). இவர் அங்கு கம்ப்யூட்டர் சென்டர் மற்றும் ஜெராக்ஸ் கடை வைத்து நடத்தி வருகிறார். இவரது கடையில் தெற்கு தெருவை சேர்ந்த அபுதாஹிர் மகன் சாஜித் என்பவர் பாஸ்போர்ட்டுக்கு விண்ணபிக்க வாக்களர் அடையாள அட்டையை பதிவு செய்து உள்ளார்.

3மாதமாகியும்அட்டை வராததால், கம்பியூட்டர் சென்டரில் சென்று கேட்டுள்ளார். முகமது சமீம் உடனடியாக வாக்காளர் அட்டையை தயார் செய்து கொடுத்துள்ளார். இதனை கொண்டு சாஜித் பாஸ் போர்ட் பெற விண்ணப் பித்துள்ளார்.

பாஸ்போர்ட் ஆவணங்கள் சரிபார்ப்பின் போது, சாஜித்தின் வாக்காளர் அட்டை போலி என அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர். வேறு ஏதேனும் அரசு ஆவணம் உள்ளதா என கேட்டுள்ளனர். பின்னர், தபாலில் வந்த வாக்காளர் அட்டையை கொடுத்துள்ளார்.

பாஸ்போர்ட் விண்ணப்பிக்க முதலில் கொடுத்த வாக்காளர் அட்டை போலி என்பதால் இது குறித்து, லப்பைக் குடிக்காடு வி.ஏ.ஒ ஐயப்பனிடம் புகார் செய்யப்பட்டது. அவர் இதுபற்றி மங்களமேடு போலீஸ் நிலையத்தில் புகார் செய்தார்.

போலீசார் முகமது சமீம் கடையை ஆய்வு செய்ததில் அங்கு இது போலஏராளமானபோலி வாக்காளர் அடையாள அட்டை தயாரித்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அவற்றை போலீசார் கைப்பற்றினர்.

தொடர்ந்து போலீசார் நடத்தியவிசாரணையில், பென்னகோணம் கிராமத்தை சேர்ந்த பெருமாள் மகன் வீரன் (47), என்பவர் பக்ரைன் நாட்டில் இருந்து, தனது மனைவி விஜயலட்சுமி மூலம் பாஸ்போர்ட்டை போலிவாக்களர்அட்டை மூலம் விண்ணப்பித்துள்ளதும் தெரியவந்தது.

தொடர்ந்து இதுபற்றி விசாரணை நடந்து வருகிறது. இதை தொடர்ந்து முகமது சமீம் மீது குற்றப் பிரிவு 330/2024 u/s 318(2), 318(4), 336(3),340(2) பி.என்.எஸ். ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிந்து கைது செய்தனர். பின்பு அவரை போலீசார் நீதி மன்றத்தில் ஆஜர்ப்படுத்தி சிறையில் அடைத்தனர்.

# 4 நகரங்களில் `குரங்கம்மை' சிகிச்சைக்கு சிறப்பு வார்டுமா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்

சென்னை, ஆக. 29

சென்னை ராஜீவ் காந்தி அரசு ஆஸ்பத்திரியில் குரங்கம்மை நோய்க்கான சிறப்பு சிகிச்சை வார்டுகளை அமைச்சர் மா.சுப்பிரமணியன் இன்று பார்வையிட்டார். பின்னர் அவர் கூறியதாவது:



ஆப்பிரிக்க நாடுகளில் பரவி வரும் குரங்கம்மை நோய் இங்கும் பரவி விடாமல் தடுக்க தேவையான முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஆப்பிரிக்க நாடுகளில் இருந்து வரும் விமானப் பயணிகள் தீவிரமாக கண்காணிக்கப்படுகிறார்கள். இதுவரை யாருக்கும் இந்த தொற்று இல்லை. தொடர்ந்து விமான நிலையங்களில் கண்காணித்து வருகிறார்கள்.

குரங்கம்மை அறிகுறியுடன் யாராவது வந்தால் அவர்களை தனிமைப்படுத்தி சிகிச்சை அளிப்பதற்காக சென்னை, மதுரை, திருச்சி, கோவை ஆகிய 4 நகரங்களில் உள்ள அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் சிறப்பு வார்டுகள் அமைக்கப்பட்டுள்ளது.

10 படுக்கைகளுடன் தொற்று நோயை தகுந்த பாதுகாப்புடன் சிகிச்சை அளிப்பதற்கான வசதிகளுடன் இந்த வார்டுகள் அமைக்கப்பட்டு உள்ளது. தமிழகத்தில் டெங்கு காய்ச்சல் கட்டுக்குள் உள்ளது. உயிரிழப்புகள் கடந்த 3 ஆண்டுகளை விட குறைந்து உள்ளது.

இந்த ஆண்டு தனியார் மருத்துவமனைகளிலும் காய்ச்சலுக்காக சிகிச்சை பெறுபவர்களை கண்காணித்து வருகிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

# பார்களுக்கு புதிய கட்டுப்பாடு விதிப்பு




கோவை, ஆக. 29

கோவை மாநகரில் மது குடித்து விட்டு வாகனம் ஓட்டி வருவோரால் அடிக்கடி விபத்துகள் ஏற்பட்டு வருகின்றன. சில நேரங்களில் உயிரிழப்புகளும் ஏற்படுகின்றன.

இதனை தடுக்க போலீசார் அடிக்கடி ரோந்து பணியில் ஈடுபட்டு மதுகுடித்து விட்டு வாகனம் ஓட்டி வருவோர் மீது வழக்குப்பதிவு செய்து நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இந்தநிலையில்சொந்த வாகனங்களில் மது அருந்த வருவோர் திரும்பி செல்லவதற்கு வசதியாக மாற்று ஏற்பாடு செய்ய வேண்டும் என மதுபான கூடங்களுக்கு கோவை மாநகர போலீசார் புதிய அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பாக மாநகர காவல்துறை வெளியிட்ட செய்திகுறிப்பில் கூறியிருப்பதாவது:

கடந்த 23ந் தேதி முதல் 25ந் தேதி வரை 3 நாட்கள் மாநகரில் வாகன தணிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதில் 126 இருசக்கர வாகன ஓட்டிகள், 18 கார்களில் வந்தவர்கள் உள்பட 52 நான்கு சக்கர வாகனங்கள் என மொத்தம் 178 பேர் மீது மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டியது தொடர்பான வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மது அருந்திவிட்டு, வாகனம் ஓட்டுவதை தடுப்பு தொடர்பாக ஏற்கனவே கோவை மாநகரில் உள்ள அனைத்து வகை பார் உரிமையாளர்களுடன் கலந்தாலோசனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

பார்களுக்கு சொந்தமாக வாகனம் ஓட்டி வருபவர்கள் திரும்ப செல்லும் போது மது அருந்தி இருந்தால் அவர்கள் வாகனத்தை இயக்காமல் இருக்க தேவையான மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பார் உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இருப்பினும் மதுக்கூட உரிமையாளர் மற்றும் நிர்வாகிகள் தங்களது மது கூடத்திற்கு மது அருந்த வருவோர், கார் உள்ளிட்ட சொந்த வாகனத்தில் வந்தால் அவர் ஓட்டுநருடன் வர வேண்டும் என்பதை உறுதி செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மது அருந்திய ஒருவர், ஓட்டுநர் இல்லாத சூழலில், அவர் பாதுகாப்பாக வீட்டுக்கு செல்ல ஓட்டுநருடன் கூடிய மாற்று வாகனத்தை ஏற்பாடு செய்து தர வேண்டும்.

அல்லது நம்பகத் தன்மை உள்ள வாகன ஓட்டுநர் ஒருவரை தொடர்புடைய பார் சார்பில் ஏற்பாடு செய்து மது அருந்தியவரின் சொந்த வாகனத்திலேயே அவரை வீட்டில் விடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

மது அருந்த பார்களுக்கு வருபவர்கள், வேறு போதைப்பொருட்களை உபயோகிக்கின்றனரா? என்பது குறித்தும், மது அருந்த வருபவர் உரிய வயது உடையவர் தான் என்பது குறித்தும் எச்சரிக்கையாக கண்காணிக்க வேண்டும்.

மது அருந்த வருபவர் நடவடிக்கை சந்தேகத்திற்குரிய வகையில் இருந்தால் உடனடியாக காவல்துறையினருக்கு தெரிவிக்க வேண்டும்.

பார்களில் சி.சி.டி.வி. கேமராக்கள் பொருத்த வேண்டும். மேற்கூறிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள தொடர்புடைய பார் நிர்வாகம் தவறி, அதன் மூலம் ஏதேனும் சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்பட்டால் தொடர்புடைய மதுக்கூடத்தின் மீது சட்டப்படி நடவடிக்கையுடன் மதுக்கூட உரிமமும் ரத்து செய்யப்படும்.

மது அருந்தி விட்டு வாகனம் ஓட்டி முதல் முறை பிடிபட்டால் வழக்குப்பதிவு செய்து ரூ.10 ஆயிரம் அபராதம் அல்லது 6 மாதம் சிறை தண்டனை அல்லது இரண்டும் சேர்த்து தண்டனையாக விதிக்க சட்டத்தில் இடம் உள்ளது.

அதே தவறை 2வது முறையாக செய்வோர் மீது ரூ.15 ஆயிரம் வரை அபராதம் அல்லது 2 ஆண்டுகள் ஜெயில் தண்டனை அல்லது இரண்டும் சேர்ந்து தண்டனையாக விதிப்பதற்கு சட்டத்தில் இடம் உள்ளது.

இதில் தொடர்புடையவர்களின் வாகனம் முடக்கப்பட்டு, ஓட்டுநர் உரிமம் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ ரத்து செய்யப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மூத்தவர்கள் இளைஞர்களுக்கு வழி விடவேண்டும்: அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்



சென்னை, ஆக. 29

சென்னை கலைவாணர் அரங்கத்தில் தி.மு.க. பொறியாளர் அணி நடத்திய கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் காசோலைகளை வழங்கி வாழ்த்தி பேசினார்.

திருவண்ணாமலை மாவட்டம் கலைவாணர் அரங்கத்தை இரண்டு நாட்கள் குத்தகை எடுத்துக் கொண்டு மிக சிறப்பான நிகழ்ச்சிகளை நடத்தி காட்டி இருக்கிறது. பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு எழுதிய 'கலைஞர் எனும் தாய்' என்ற புத்தகத்தை நமது முதலமைச்சர் வெளியிட்டார். இது ஒரு சிறப்பான நிகழ்ச்சி.

அதில் முதல் பிரதியை பெற்றுக்கொண்ட சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், கிட்டத்தட்ட 45 நிமிடம் நம்முடைய தலைவரைப் பற்றியும், கலைஞரைப் பற்றியும் பாராட்டி பேசினார்.

அதன் தொடர்ச்சியாக பொறியாளர் அணி சார்பில் நிகழ்ச்சி நடக்கிறது. அண்ணன் பொன்முடி பேசும்போது குறிப்பிட்டுச் சொன்னார்.

அவருக்கு ஒரு ஏக்கம் என்ஜினீயரிங் படிக்க முடியவில்லையே என்றார். எனக்கெல்லாம் அந்த ஏக்கம் இருந்தது கிடையாது. நான் அதற்கான முயற்சி எடுக்கவே இல்லை.

நாங்கள் படிக்கும் போதெல்லாம் எம்.பி.பி.எஸ். பக்கமே தலை வைத்து படுக்க கூடாது என்று நினைப்போம். எம்.பி.பி.எஸ்., என்ஜினீயரிங் பக்கமே போக மாட்டோம். நேராக பி.காம் முடித்துவிட்டு அப்படியே பிசினஸ் பார்க்க போய் விடுவோம்.

அதே மாதிரி அண்ணன் பொன்முடி பேசும்போது சொன்னார் தயாநிதி மாறனுக்கு மூத்தவர்களை கண்டால்பிடிக்கவேபிடிக்காது என்றார். அப்படியெல்லாம் கிடையாது. நான் ஏன் இதைசொல்கிறேன் என்றால், அண்ணன் தயாநிதி மாறனே எனக்கு மூத்தவர்தான். எனக்கு எல்லோருமே சமம்தான். இன்னும் சொல்லப் போனால் இங்கு இருப்பதிலேயே மிகவும் சின்னவன் நான்தான்.

தி.மு.க. இளைஞரணி அறிவித்து கிட்டத்தட்ட 17 ஆயிரம் மாணவர்கள் கலைஞரின் உயிரினும் மேலான பேச்சுப் போட்டிக்கு விண்ணப்பித்து இருக்கிறார்கள்.

இளைஞர்கள் தயாராக இருக்கிறார்கள். நம்ம பக்கம் வருவதற்கு தயாராக இருக்கிறார்கள். நாம்தான் அவங்களுக்கு வழிவிட்டு அரவணைத்து அவங்களை வழி நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு வேண்டுகோள் வழிவிட்டு வழி நடத்தி கைபிடித்து கூட்டி செல்ல வேண்டும்.

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நேற்று முன்தினம் பேசும்போது எதற்கு அதிகமான கைத்தட்டல்கள் என்பதை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். நான் சொல்லக்கூடாது. நான் சொன்னால் ஏதோ மனதில் வைத்துக்கொண்டு சொல்கிறேன் என்று நினைத்து கொள்வீர்கள். தொலைக்காட்சிகளில் நீங்களே பார்த்திருப்பீர்கள்.

இவ்வாறு அவர் பேசினார்.

உதயநிதி ஸ்டாலினின் இந்த பேச்சை இளைஞரணியினர் வரவேற்கும் நிலையில் மூத்தவர்களுக்கு இப்போது 'கிலி' ஏற்பட்டு உள்ளது.

ஏற்கனவே நடிகர் ரஜினிகாந்தும் இதே கருத்தை வலியுறுத்தி துரைமுருகனை பார்த்து பேசியதால் சர்ச்சையில் சிக்கினார். இதற்கு அமைச்சர் துரைமுருகனும் காட்டமாக பதில் தெரிவித்திருந்தார். அதன் பிறகே இருவரும் நண்பர்களாக இருப்போம் என்று கருத்து தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து மூத்த நிர்வாகி ஒருவர் கூறுகையில், "அண்ணா கட்சி ஆரம்பித்த காலத்தில் தி.மு.க. நிர்வாகிகள், எம்.எல்.ஏ.க்களாக இருந்தவர்களில் பெரும்பாலானோருக்கு 35 வயதுதான். ஆனால் இப்போது 50 வயதை தாண்டியவர்கள் தான் அதிகம் உள்ளனர்.

வாக்காளர் பட்டியலில் கூட இப்போது 40 வயதுக்கு உட்பட்டவர்கள் எண்ணிக்கை அதிகமாகி விட்டது. அதனால்தான் இளைஞரணியினருக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் உதயநிதி ஸ்டாலின் மட்டுமல்ல ரஜினிகாந்தும் அதை வலியுறுத்தி இருக்கிறார்.

எனவே இந்த கருத்துக்களால் தி.மு.க.வில் மாற்றங்கள் தொடங்கி விட்டதாகவே நாங்கள் கருதுகிறோம். அதனால் தான் கட்சியில் மூத்தவர்களுக்கு இப்போது 'கிலி' ஏற்படுகிறது" என்றார்.

தினகனி



## 'வேட்டையன்' படத்திற்கான டப்பிங் பணியில் நடிகை மஞ்சு வாரியர்



நடிகர் ரஜினிகாந்த் தனது 170வது படமான 'வேட்டையன்' படத்தில் நடித்து முடித்துள்ளார். லைகா நிறுவனம் தயாரிக்கும் இப்படத்தை 'ஜெய்பீம்' பட இயக்குனர் த.செ.ஞானவேல் இயக்கியுள்ளார். இதில், அமிதாப்பச்சன், பகத் பாசில், துஷாரா விஜயன், மஞ்சு வாரியர், ரித்திகா சிங் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இப்படம் தமிழ், தெலுங்கு, இந்தி மற்றும் கன்னடம் உள்ளிட்ட மொழிகளில் வெளியாக உள்ளது.

இந்த படத்திற்கு அனிருத் இசையமைத்துள்ளார். இந்த படத்தின் படப்பிடிப்பு கேரளாவில் தொடங்கி, சென்னை, மும்பை, திருநெல்வேலி, பாண்டிச்சேரி எனப் பல்வேறு பகுதிகளில் நடந்தது. படப்பிடிப்பு நிறைவுபெற்று பின்னணி வேலைகள் நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில் இதன் டப்பிங் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

இப்படத்தில் முக்கிய பாத்திரத்தில் நடித்துள்ள பகத் பாசில் தனது டப்பிங் பணிகளை ஏற்கனவே முடித்துவிட்டார். மேலும் துஷாரா விஜயன் மற்றும் ரித்திகா சிங் ஆகியோரும் தங்களுடைய டப்பிங் பணிகளை முடித்துள்ளனர். அந்தவகையில் தற்போது நடிகை மஞ்சு வாரியரும் வேட்டையன் படத்திற்கான டப்பிங் பணியில் ஈடுபட்டுள்ளார். அவர் டப்பிங் செய்யும்போது எடுக்கப்பட்ட புகைப்படங்களை படக்குழு வெளியிட்டுள்ளனர். 'வேட்டையன்' திரைப்படம் வருகிற செப்டம்பர் மாதம் 10ந் தேதி வெளியாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

## 'வாழ' படத்தின் 2ம் பாகத்தை உருவாக்க இருப்பதாக விபின் தாஸ் அறிவிப்பு



சினிமா திரையுலகில் ஒரு படம் வெற்றியடைந்த பின்னர் அதன் தொடர்ச்சியாக அடுத்த பாகங்களை எடுப்பது இயல்பாக உள்ளது. ஆனால், ஒரே பெயர் கொண்ட படங்கள் அடுத்தடுத்து வெளியாவது ஒரு ஆச்சரியமான நிகழ்வு. அதன்படி, ரஜினிகாந்த் நடிப்பில் உருவான ஜெயிலர் படம் வெளியான சில நாட்களிலேயே அதே பெயரில் மலையாளத்தில் ஒரு படம் வெளியானது.

தற்போதும், இப்படி ஒரு நிகழ்வு நடந்துள்ளது. தமிழில் மாரி செல்வராஜ் இயக்கத்தில் 'வாழை' படம் சமீபத்தில் வெளியானது. இதேபோல, மலையாளத்திலும் 'வாழ' என்கிற பெயரில் சில நாட்களுக்கு முன்பு ஒரு திரைப்படம் வெளியாகி இருக்கிறது. இவ்விரு படங்களுமே நல்ல வரவேற்பை பெற்று வருகின்றன.

மலையாள படமான 'வாழ' படத்தை பிரபல இயக்குனரும், தயாரிப்பாளருமான விபின் தாஸ் தயாரித்துள்ளார். இதற்கு முன்னதாக இவர் ஜெய ஜெய ஜெய ஜெய ஹே, குருவாயூர் அம்பல நடையில் உள்ளிட்ட படங்களை இயக்கி இருக்கிறார்.

சவின் இயக்கி இருக்கும் இப்படம் மிகப்பெரிய வெற்றி பெற்றதை தொடர்ந்து, இதன் இரண்டாம் பாகத்தை இதே இயக்குனர் மற்றும் நட்சத்திரங்களுடன் உருவாக்க இருப்பதாக விபின் தாஸ் அறிவித்துள்ளார்

## 'இன்னும் 100 நாட்கள்' வைரலாகும் 'புஷ்பா 2' படத்தின் புதிய போஸ்டர்





அல்லு அர்ஜுன் நடிப்பில் கடந்த 2021ம் ஆண்டு வெளியாகி மிகப்பெரிய அளவில் ஹிட் அடித்த படம் புஷ்பா தி ரைஸ். இப்படத்தின் வெற்றியைத் தொடர்ந்து, தற்போது இதன் இரண்டாம் பாகமாக. 'புஷ்பா 2 தி ரூல்' படம் உருவாகி வருகிறது.

சமீபத்தில் 'புஷ்பா 2 தி ரூல்' படத்தின் டீசரும் அதனைத் தொடர்ந்து படத்தின் பாடல்களில் லிரிக் வீடியோவும் வெளியாகி வைரலாகின. இப்படம் கடந்த 15ம் தேதி வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் படப்பிடிப்பில் சில தாமதங்கள் ஏற்பட்டதால் படத்தின் ரிலீஸ் தேதி தள்ளிப்போனது.

பின்னர், 'புஷ்பா 2 தி ரூல்' படம் வருகிற டிசம்பர் 6ந் தேதி வெளியாகும் என அதிகாரப்பூர்வ ரிலீஸ் தேதியை அறிவித்தனர். அதன்படி, இப்படம் வெளியாக இன்னும் சரியாக 100 நாட்கள் உள்ளன. இதனையடுத்து, படக்குழு புதிய போஸ்டர் ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில், 'இன்னும் 100 நாட்கள்' என்று பதிவிட்டும் உள்ளனர். இதனையடுத்து இந்த போஸ்டர் தற்போது வைரலாகி வருகிறது.

## 'தேவரா பாகம் 1': டிரெய்லர் எப்போது? வெளியான தகவல்



நடிகர் ஜூனியர் என்.டி.ஆரின் 30வது படமாக உருவாகி வரும் 'தேவரா பாகம்1' படத்தை இயக்குனர் கொரட்டலா சிவா இயக்குகிறார். அனிருத் இசையமைக்கும் இந்த படத்தில் பாலிவுட் நடிகை ஜான்வி கபூர் நாயகியாக நடித்துள்ளார்.

மேலும் இந்த படத்தில் சாயிப் அலிகான், பிரகாஷ்ராஜ் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இந்த படத்தின் படப்பிடிப்பு தாய்லாந்து, ஐதராபாத் ஆகிய பகுதிகளில் மிக தீவிரமாக நடைபெற்று வந்த நிலையில் படத்தின் இறுதி கட்ட பணிகளும் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன.

சமீபத்தில், இப்படத்தின் 2 பாடல்கள் வெளியாகி வைரலாகின. அடுத்த மாதம் 27ம் தேதி இப்படம் திரையரங்குகளில் வெளியாக உள்ளநிலையில், அதற்கு முன்பாக இதன் டிரெய்லரைக்காண ரசிகர்கள் ஆர்வத்துடன் உள்ளனர். இந்நிலையில், 'தேவரா பாகம்1': டிரெய்லர் எப்போது வெளியாகும் என்பது குறித்த தகவல் வெளியாகி உள்ளது.

அதன்படி, இப்படத்தின் டிரெய்லர் அடுத்த மாதம் 15ம் தேதி வெளியாகும் என்ற தகவல் இணையத்தில் பரவி வருகிறது. விரைவில் இது குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## சசிகுமார் நடித்த 'நந்தன்' படத்தின் ரிலீஸ் குறித்த அப்டேட்





'சுப்ரமணியபுரம்' படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமானவர் சசிகுமார். இன்றும் விமர்சகர்கள், ரசிகர்கள் மத்தியில் இத்திரைப்படம் தனி கவனத்தைப் பெற்று வருகிறது. சுப்ரமணியபுரத்துக்குப் பின் 'ஈசன்' படத்தை இயக்கிய சசிகுமார் அதன்பின் நடிப்பதில் கவனம் செலுத்தினார். 'அயோத்தி' வெற்றிப்படமாக அமைந்ததுடன் நல்ல பெயரையும் பெற்றுத் தந்தது.

'கருடன்' திரைப்படத்தின் வெற்றியை தொடர்ந்து நடிகர் சசிகுமார் நடித்துள்ள 'நந்தன்' திரைப்படம் நீண்ட நாள் இடைவெளிக்கு பிறகு வெளியாக உள்ளது. இந்த படத்தினை 'உடன்பிறப்பே' என்ற படத்தை இயக்கிய ரா.சரவணன் இயக்கியுள்ளார். சசிகுமார் இதுவரை நாம் பார்த்திராத தோற்றத்தில் இப்படத்தில் நடித்துள்ளார். இவருடன் ஸ்ருதி பெரியசாமி மற்றும் பாலாஜி சக்திவேல் முக்கியமான கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளனர்.

இந்தநிலையில், 'நந்தன்' திரைப்படத்தின் ரிலீஸ் குறித்த அப்டேட் வெளியாகி உள்ளது. அதன்படி, இத்திரைப்படம் வருகிற செப்டம்பர் மாதம் 20ந் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது. இது குறித்த பதிவை நடிகர் சசிகுமார் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ளார்.

## 'கூலி' படத்தில் இணைந்த 'மஞ்சுமெல் பாய்ஸ்' நடிகர்




சன் பிக்சர்ஸ் தயாரிப்பில் நடிகர் ரஜினிகாந்த்தின் 171 படமாக 'கூலி' உருவாகிறது. இயக்குனர் லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் படத்தின் படப்பிடிப்பு ஹைதராபாத்தில் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இதில் முக்கிய கதாபாத்திரத்தில் சுருதி ஹாசன், சத்யராஜ், உபேந்திரா உள்ளிட்டோர் நடிக்கின்றனர்.

இதற்கிடையே, படத்தின் வணிகத்திற்காக பிற மொழி நட்சத்திர நடிகர்களை நடிக்க வைக்க தயாரிப்பு நிறுவனம் முயன்று வருவதாக கூறப்படுகிறது. இந்த சூழலில், இப்படத்தின் கதாபாத்திரங்களின் அறிமுகங்கள் நாளை மாலை 6 மணியிலிருந்து துவங்கும் என இயக்குநர் லோகேஷ் கனகராஜ் நேற்று தெரிவித்திருந்தார்.

அதன்படி, தற்போது முதல் கதாபாத்திரத்தை கூலி படக்குழு அறிமுகப்படுத்தி உள்ளது. அதன்படி, மலையாள நடிகர் சவுபின் சாஹிர் கூலி படத்தில் இணைந்திருக்கிறார். இப்படத்தில் தயாள் என்ற கதாபாத்திரத்தில் நடிக்கிறார். இதற்கு முன்னதாக மிகப்பெரிய அளவில் வரவேற்பை பெற்ற 'மஞ்சுமெல் பாய்ஸ்' படத்தில் சவுபின் சாஹிர் நடித்திருந்தார்.

## மாநில தரவரிசை டென்பின் போட்டி க்ளிஃப்ஹேங்கர் இறுதிப் போட்டியில் கணேஷ் வெற்றி





3 வது தமிழ்நாடு மாநில தரவரிசை டென்பின் பவுலிங் சாம்பியன் தொடர், சென்னையில் நடைபெற்றது. இதன் இறுதிப் போட்டி ஆக்ஸ்ட் 25 ஆம் தேதி டென்பின் பவுலிங் விளையாட்டு தளத்தில் நடைபெற்றது.

இரண்டு போட்டிகளின் ஒட்டுமொத்த பின்ஃபால் அடிப்படையில் நடந்த இறுதிப் போட்டியில், கணேஷ் தீபக் இடையிலான போட்டி பரபரப்பான முறையில் நடைபெற்றது. முதல் ஆட்டத்திற்குப் பிறகு 2 பின்களின் மெல்லிய விளிம்பில், 2 வது போட்டியில் கணேஷ் 6 புள்ளிகள் மூலம் தீபக்கை வீழ்த்தினார். இறுதியில் தீபக் 4 பின்கள் என்ற குறுகிய புள்ளிகள் (420416) வித்தியாசத்தில் தோல்வியடைந்தார்.

முன்னதாக முதல் அரையிறுதி இரண்டு போட்டிகளின் ஒட்டுமொத்த பின்ஃபால் அடிப்படையில் விளையாடப்பட்டது. இதில், முதல் நிலை வீரரான தீபாக் கோத்தாரி இரண்டு போட்டிகளில் நான்காம் நிலை வீரரான அக்ரமுல்லா பெய்க்கை (405372) என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வீழ்த்தினார்.

33 பின்களின் பின்ஃபால் வித்தியாசத்தில் நாக் அவுட் முறையில் இரண்டாவது அரையிறுதியில், இரண்டாம் நிலை வீரரான கணேஷ். என்.டி, மூன்றாம் நிலை வீரரான பார்த்திபன்.ஜெ அவர்களை (441416) 25 பின்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி , இறுதிப் போட்டிகான தனது இடத்தை உறுதி செய்தார் என்பது குறிப்பிடத்தகக்து.

## அமெரிக்க ஓபன் டென்னிஸ்; வரலாறு படைத்த எவன்ஸ் கச்சனோவ் ஆட்டம்



ஆண்டின் கடைசி கிராண்ட்ஸ்லாமான அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி நியூயார்க்கில் நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் பல முன்னணி வீரர் மற்றும் வீராங்கனைகள் கலந்து கொண்டுள்ளனர்.

இந்நிலையில் இந்த தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் பிரிட்டனின் டான் எவன்ஸ் ரஷியாவின் கரேன் கச்சனோவ் உடன் மோதினார். மிகவும் பரபரப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் இரு வீரர்களும் மாறி மாறி புள்ளிகளை எடுத்தனர்.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் 67 (68), 76 (72), 76 (74), 46, 64 என்ற செட் கணக்கில் ரஷியாவின் கரேன் கச்சனோவை வீழ்த்தி டான் எவன்ஸ் வெற்றி பெற்றார். இந்த ஆட்டம் 5 மணி நேரம் 35 நிமிடங்கள் நடைபெற்றது.

இதன் மூலம் அமெரிக்க ஓபன் டென்னிஸ் வரலாற்றில் நீண்ட நேரம் நடைபெற்ற போட்டியாக எவன்ஸ் கச்சனோவ் ஆட்டம் வரலாறு படைத்துள்ளது. இதற்கு முன்பு 1992ம் ஆண்டு நடைபெற்ற ஒரு அரையிறுதி ஆட்டம் ஒன்று 5 மணி நேரம் 25 நிமிடம் நடைபெற்றது. அந்த ஆட்டத்தில் ஸ்வீடனின் ஸ்டீபன் எட்பெர்க், அமெரிக்க வீரரான மைக்கேல் சாங்கை தோற்கடித்தார். தற்போது இந்த சாதனை தகர்க்கப்பட்டுள்ளது.

## இலங்கைக்கு எதிரான 2வது டெஸ்ட்; இங்கிலாந்து ஆடும் லெவன் அறிவிப்பு



இலங்கை கிரிக்கெட் அணி இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடி வருகிறது. இதில் முதல் போட்டியில் இங்கிலாந்து வெற்றி பெற்று தொடரில் 10 என முன்னிலையில் உள்ளது.

இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான 2வது டெஸ்ட் போட்டி நாளை லண்டனில் தொடங்குகிறது. இந்நிலையில் இந்த ஆட்டத்திற்கான இங்கிலாந்தின் ஆடும் லெவன் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அணியில் முந்தைய ஆட்டத்தின் போது காயம் அ டைந்த மார்க் வுட்டிற்கு பதிலாக ஆலி ஸ்டோன் இடம் பிடித்துள்ளார். இங்கிலாந்து ஆடும் லெவன் விவரம்; பென் டக்கட், டேன் லாரன்ஸ், ஆலி போப் (கேப்டன்), ஜோ ரூட், ஹாரி புரூக் (துணை கேப்டன்), ஜேமி ஸ்மித் (விக்கெட் கீப்பர்), கிறிஸ் வோக்ஸ், கஸ் அட்கின்சன், மேத்யூ பாட்ஸ், ஆலி ஸ்டோன், ஷோயப் பாஷீர்.

## அமெரிக்க ஓபன் டென்னிஸ்; முதல் சுற்றில் தோல்வி கண்ட சிட்சிபாஸ்



ஆண்டின் கடைசி கிராண்ட்ஸ்லாமான அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி நியூயார்க்கில் நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் பல முன்னணி வீரர் மற்றும் வீராங்கனைகள் கலந்து கொண்டுள்ளனர்.

இந்நிலையில் இந்த தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் கிரேக்க முன்னணி வீரரான ஸ்டெபனோஸ் சிட்சிபாஸ், ஆஸ்திரேலியாவின் தனாசி கொக்கினாகிஸ் உடன் மோதினார்.

இந்த ஆட்டத்தில் எளிதில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறுவார் என எதிர்பார்க்கப்பட்ட சிட்சிபாஸ் 6-7 (5-7), 6-4, 3-6, 5-7 என்ற செட் கணக்கில் ஆஸ்திரேலியாவின் தனாசி கொக்கினாகிஸ்டம் தோல்வி கண்டு முதல் சுற்றுடன் தொடரில் இருந்து வெளியேறினார்.

## டி20 தொடரை 30 என்ற கணக்கில் வெஸ்ட் இண்டீஸ் முழுமையாக கைப்பற்றியது




தென் ஆப்பிரிக்க கிரிக்கெட் அணி வெஸ்ட் இண்டீசில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் ஆடியது. இதில் முதல் இரு போட்டிகளில் வெஸ்ட் இண்டீஸ் வெற்றி பெற்று 20 என்ற கணக்கில் தொடரை ஏற்கனவே கைப்பற்றிவிட்டது.

இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான கடைசி டி20 போட்டி இன்று நடைபெற்றது. இந்த போட்டி மழை காரணமாக 13 ஓவர்களாக குறைக்கப்பட்டது. இந்த ஆட்டத்தில் முதலில் பேட்டிங் ஆடிய தென் ஆப்பிரிக்கா 13 ஓவர்களில் 4 விக்கெட்டை இழந்து 108 ரன்கள் எடுத்தது.

தென் ஆப்பிரிக்கா தரப்பில் ஸ்டப்ஸ் 40 ரன்கள் எடுத்தார். இதையடுத்து 109 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் இறங்கிய வெஸ்ட் இண்டீஸ் 9.2 ஓவர்களில் 2 விக்கெட்டை மட்டும் இழந்து 116 ரன்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது.

வெஸ்ட் இண்டீஸ் தரப்பில் அதிகபட்சமாக ஷாப் ஹோப் 42 ரன்கள் எடுத்தார். இந்த வெற்றியின் மூலம் டி20 தொடரை 30 என்ற கணக்கில் வெஸ்ட் இண்டீஸ் முழுமையாக கைப்பற்றியது.

## இந்த உலகக்கோப்பையில் எல்லா துறைகளிலும் சிறப்பாக செயல்படுவோம்: ஹர்மன்ப்ரீத் கவுர்



10 அணிகள் இடையிலான 9வது ஐ.சி.சி. மகளிர் டி20 உலகக்கோப்பை தொடர் துபாய் மற்றும் ஷார்ஜாவில் அக்டோபர் 3ம் தேதி முதல் 20ம் தேதி வரை நடைபெற உள்ளது. இந்த தொடரில் கலந்து கொள்ளும் 10 அணிகள் இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. அதில் குரூப் ஏயில் ஆஸ்திரேலியா, இந்தியா, நியூசிலாந்து, பாகிஸ்தான், இலங்கை அணிகளும், குரூப் பியில் தென் ஆப்பிரிக்கா, இங்கிலாந்து, வெஸ்ட் இண்டீஸ், வங்காளதேசம், ஸ்காட்லாந்து அணிகளும் இடம் பிடித்துள்ளன.

இந்த தொடருக்கான இந்திய அணி ஹர்மன்ப்ரீத் கவுர் தலைமையில் நேற்று அறிவிக்கப்பட்டது. இந்திய அணி தனது தொடக்கலீக் ஆட்டத்தில் அக்டோபர் 4ம் தேதி நியூசிலாந்தை துபாயில் சந்திக்கிறது. மிகவும் எதிர்பார்க்கப்படும் இந்தியா பாகிஸ்தான் ஆட்டம் அக்டோபர் 6ல் துபாயில் நடக்கிறது.

இந்நிலையில் இந்த உலகக்கோப்பையில் எல்லா துறைகளிலும் சிறப்பாக செயல்படுவோம் என இந்திய கேப்டன் ஹர்மன்ப்ரீத் கவுர் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது, இதுபோன்ற உலகக் கோப்பை போட்டியில் நாங்கள் எப்போது விளையாடினாலும் சிறப்பாகவே செயல்பட விரும்புகிறோம்.

யு.ஏ.இயில் உள்ள சீதோஷ்ண நிலை நமது நாட்டை போலவே இருக்கும். அங்குள்ள ஆடுகளத்தன்மை மற்றும் சூழல் எப்படி இருக்கிறது என்பதை பார்த்து அதற்குதகுந்தபடி எங்களை விரைவாக மாற்றிக்கொள்ள முயற்சிப்போம்.

ஒரு அணியாக நாங்கள் தோல்வியில் இருந்து கற்றுக் கொண்டதை வைத்து, எங்களது பின்னடைவுக்கு காரணமாக தடைகளை முறியடிப்போம். இந்த உலகக் கோப்பையில் நாங்கள் எல்லா துறையிலும் சிறப்பாக செயல்படுவோம். இவ்வாறு அவர் கூறினார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.